செ.வெ.எண்: 34 நாள்:14.09.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நாகப்பட்டினம் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் வழங்கினார்கள்.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை நாகப்பட்டினம் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எம்.செல்வராஜ் அவர்கள் மற்றும் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் திரு.செ.ராமலிங்கம் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.லலிதா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (14.09.2021) வழங்கினார்கள்.

நாகப்பட்டினம் மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை சார்பில் அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் திருமண உதவித்தொகைகள் மற்றும் தங்கநாணயம் வழங்கும் திட்டத்தின் கீழ் 29 மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.25,38,868 மதிப்பீட்டில் திருமண உதவித்தொகை மற்றும் தங்க நாணயத்தையும், 4 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.3,06,000 மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டரையும், 16 மாற்றுத்திறனாளி நபர்களுக்கு ரூ.2,08,000 மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான கைப்பேசியினையும், ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ.8,000 மதிப்புள்ள மூன்று சக்கர சைக்கிள் மற்றும் முழங்கை ஊன்றுகோலினையும், தொடர்ந்து தோட்டக்கலை துறை சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு பந்தல் சாகுபடி செய்வதற்கு ரூ.30.000/ மானியத் தொகையையும், பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான நுண்ணீர் பாசன திட்டத்தின் கீழ் ஒரு நபருக்கு தெளிப்பு நீர் பாசனம் செய்வதற்கு ரூ.20,865/ மானியத் தொகையையும் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு சலவைப்பெட்டி போன்ற நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு நாகப்பட்டினம் பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.நாகைமாலி அவர்கள், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் திரு.நிவேதா எம்.முருகன் அவர்கள், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.பன்னீர்செல்வம், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி.உமா மகேஸ்வரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பே.பெரியசாமி, ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்கள், மாவட்ட மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலர் திரு.சீனிவாசன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**